ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2293/63 - 2022 අගෝස්තු මස 19 වැනි සිකුරාදා - 2022.08.19
2293/63 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/1978* (XV) (ஆ)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(அ) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1)(அ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரைமீது, கட்புல மற்றும் அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்றதும், (காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான) 2005, யூலை 08 ஆந் திகதிய 1400/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள "ஆங்கில மொழி கற்பித்தல் துறை" பதிவுக்கு நேரொத்ததாகவுள்ளதும், (2021, மார்சு 01 ஆந் திகதிய 2217/2 ஆம் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட) அட்டவணையின் நிரல் I இல் காணப்படும் "நடன மற்றும் நாட்டிய பீடம்" என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பதிவினை சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்:*

"தகவல் தொழில்நுட்பத் துறை"

**அ. தொ. சுசில் பிரேமஜயந்த,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2022, ஓகத்து 17.*

EOG *08-0182*

1A - PG 5934 — 457 (2022/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*